# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0132/2015

ஆணை எண்.011/2015

நாள்: 08/10/2015

திரு. ரெ. சந்திரசேகரன்,
த/பெ. ரெத்தினவேல்பிள்ளை,
20, செட்டியார் கோவில், வடக்கு வீதி,
குத்தாலம்–609 801,
நாகப்பட்டினம் மாவட்டம்.

- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
குத்தாலம் பேரூராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம்.

- எதிர் மனுதாரர்

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சி, புல எண்கள்.734 (ம) 735 சாலை வகைபாடிட்ட நிலம் ஆக்கிரமிக்கப்பட்டதை அகற்றக்கோரும் திரு. ரெ. சந்திரசேகரன் அவர்களது முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.132 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சி, புல எண்கள்.734 (ம) 735 சாலை வகைபாட்டு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, ஆக்கிரமிப்பாளர்கள் வீடுகட்டி குடியிருந்து வருவதாகவும், அவ்வாக்கிரமிப்பினை அகற்ற ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுதாரர் மனுச் செய்துள்ளார். ஆக்கிரமிப்பு சுமார் 20 ஆண்டுகாலமாக உள்ளது என தெரிய வருகிறது. ஆக்கிரமிப்புகளை அகற்ற குத்தாலம் வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் ஆக்கிரமிப்பாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப் பிரிவு 10க்கு உட்பட்ட துணைப்பிரிவு (3) ன் படி, நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு மற்றும் முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்க இயலாது. எனினும் ஆக்கிரமிப்பினை அகற்ற மேற்கொண்டுள்ள நடவடிக்கையை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். எனவே நீதிமன்ற ஆணைக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

13/10/15
கண்காணிப்பாளர்

பெறுநர்

திரு. ரெ. சந்திரசேகரன்,
த/பெ. ரெத்தினவேல்பிள்ளை,
20, செட்டியார் கோவில், வடக்கு வீதி,
குத்தாலம்–609 801,
நாகப்பட்டினம் மாவட்டம்.

செயல் அலுவலர்,
குத்தாலம் பேரூராட்சி,
குத்தாலம், நாகப்பட்டினம் மாவட்டம்.